


# 'டுஷின்' தசை சிதைவு நோய் பற்றிய சமுதாய கருத்தரங்கு

**கோவை, ஜூலை 3–**

கோவை, ஜென்னி கிளப்பில், எம்டிசிஆர்சி மற்றும் அரசு பொது சுகாதார துறை சார்பில், 'டுஷின்' தசை சிதைவு நோய் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கை, டாக்டர் பிரோஸ்கான் தொடங்கி வைத்தார். எம்டிசிஆர்சி நிர்வாக இயக்குனர் பி.ஆர்.லஷ்மி முன்னிலை வகித்தார். மருத்துவர்கள் கிருஷ்ணா, நந்தா லஷ்மி, பூபேஷ் உள்பட, பலர் கருத்தரங்கில் கலந்து கொண்டு, பேசினர்.

கருத்தரங்கில், பொது சுகாதாரத்துறை அலுவலர்கள், 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில், டுஷின் தசை சிதைவு நோய் பற்றி, சமுதாயத்தில் உள்ள அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று நோக்கத்தில் கருத்தரங்கில் விளக்கி கூறப்பட்டது.